1978 மார்ச் 4]

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்த விளம்பரங்களிலே பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதிலே முறைகேடுகள் இருக்கின்றனவா, அப்படி இருந்தால் அவைகள்மீது நடவடிக்கை எடுக்க வாய்ப்பு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, விளம்பரம் தருவதில் ஒன்றும் இருப்பதில்லை. விளம்பரம் தந்திருக்கிறார்கள். விளம்பரத்திற்குப் பணம் தந்திருக்கிறார்கள், அதற்கான சில விதிமுறைகள் அன்றைக்கும் வகுத்திருக்கிறார்கள். இன்றைக்கும் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஏற்கனவே விளம்பரங்கள் கொடுத்ததில் முறைகேடுகள் இருக்கின்றன என்பதை இந்த மன்றமே அறிகிறது. இப்போதாகிலும் முறைகேடுகள் தவிர்க்கப்பட்டு ஏதாவது ஒரு அடிப்படை கொள்கை வகுக்கப்பட்டு அரசு விளம்பரங்களைக் கொடுக்க முன்வருமா ? எந்த அடிப்படையில் இப்போது கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : முன்னாலே இருந்த முறைகேடுகள் பற்றி இந்த அரசுக்குத் தெரியாது. இன்றைக்கு அரசு விளம்பரம் கொடுப்பதற்கான சில விதிமுறைகளை வைத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு அடிப்படையாக விற்பனையாகும் பிரதிகள், இதழ்களின் தரம், தன்மை, ஒழுங்காக வெளியிடப்படும் முறை, பத்திரிகை விதிமுறைகள் பத்திரிகை தர்மம் இவைகளைக் கடைப்பிடிக்கும் பழக்கம், ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இப்பத்திரிகைகள் ஆய்வு செய்யப்பட்டு அங்கீகாரப் பட்டியலில் இடம் பெறுகின்றன. அதற்குப் பிறகு அரசு விளம்பரம் வருகிறது.

மாயூரம் ஒன்றியத்தின் பாலங்கள்.

* வினா 389— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், சேத்தூர் பஞ்சாயத்தில் உடையூர் பருத்திக்குடியை இணைக்கப் பாலம் ஒன்று ஒன்றியத்தின் மூலம் கட்டப்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும்

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (இ):—இப்பாலம் கட்டும் பணி 1972-ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒப்பந்தக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. வேலை அடித்தளம் மட்டம் வரை (Desk slab) செய்யப்பட்டு நிறுத்தப்பட்டுவிட்டது. உரிய காலத்தில் வேலை செய்து முடிக்கப்படாததால் ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது. வேறு புதிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் ஒன்றியம் சேத்தூர் பஞ்சாயத்தில் உடையூர் பருத்திக்குடியை இணைக்கின்ற பாலம் மிகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகையில் கட்டப்படக் கூடிய சாதாரண பாலம். மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியது போல் 1972 ஆம் ஆண்டிலிருந்து இன்னும் சரிவரக் கவனிக்கப்படாமல், கட்டப்படாமல் இருந்து வருகிறது. தயவு செய்து, அங்கே உள்ள நடைமுறைச் சிக்கல்களை நீக்கி மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது குறிப்பிட்ட ஆணையிட்டு, பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் அங்கே குடியிருந்து வருகிறார்கள். என் எல்லோருமே தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள அந்தப் பகுதியில் விரைவில் பாலம் கட்டி முடிக்க இனியேனும் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அந்த ஒப்பந்தக்காரர் அதை நடத்திக் கொடுக்காத காரணத்தால் அவர் கட்டிய அச்சாரத் தொகையும், பிணையத் தொகையும் பறிமுதல் செய்யப்பட்டது. எஞ்சிய பணியை மேற்கொள்ளப் புது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்ளதாகவும், அப்பணி விரைவில் எடுத்துக் கொள்ளப்படுமென்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

*வினா 390—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம், கொற்கை பஞ்சாயத்தையும், தாழஞ்சேரி பஞ்சாயத்தினையும் இணைக்க ஐயாவையனாறுக்குக் குறுக்கே பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்போது கட்டி முடிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்.

(இ) மாயூரம் ஊராட்சி மன்றம் இவ் வேலையை ரூ. 1,50,000 செலவில் தன் ஒன்றிய நிதியினின்றும் வைப்பு வேலையாக நெடுஞ்சாலைத் துறையினரிடத்தில் ஒப்படைத்து செயலாற்ற தீர்மானித்துள்ளது. இதற்கான ஆய்வு வேலைகளுக்குத் தேவையான செலவுத் தொகையை நெடுஞ்சாலைத்துறைக்கு செலுத்தப்பட்டு விட்டது. இந்த வேலையை விரைவாகத் துவங்குவதற்கான முன் நடவடிக்கைகளை எடுத்து விரைவில் முடிக்குமாறு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.